30 MAY 2008
Eastern University, Sri L

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I – 2005/2006(வெளிவாரி)
## (பெப்ரவரி/மார்ச் 2008)

## ECO 202 பேரினப் பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

01. (அ) தேசிய வருமானத்தின் சமநிலை மட்டம் என்பதிலிருந்து நீா் விளங்கிக்கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) பொருளாதாரம் ஒன்றிற்குரிய பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன அவற்றைக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்க விடை காண்க.

$C = 20 + 0.8\ Yd$ $\quad I =$ ரூபா 50 மில்லியன்

$G =$ ரூபா 20 மில்லியன் $\quad Yd = Y - Tn$

$Tn = Tx - Tr$

$Tr = 0$, $Tx =$ ரூபா 10 மில்லியன்

(a) சமநிலைத் தேசிய வருமானத்தைக் காண்க.
(b) சமநிலை வருமானத்தில் நுகர்வையும் சேமிப்பையும் காண்க.
(c) சமநிலையில் உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் என்தை நிறுவுக.

(15 புள்ளிகள்)

02. (அ) பிரதான பேரினப் பொருளாதார இலக்குகளைத் தருக?

(08 புள்ளிகள்)

(ஆ) இறைக் கொள்கையினூடாக இவ் இலக்குகள் எவ்விதம் அடைந்து கொள்ப்படுகின்றன?

(12 புள்ளிகள்)

03. (அ) பழம் பொருளியலாளர்களின் பேரினப் பொருளியல் கோட்பாட்டின் பிரதானமான சிறப்பம்சங்களைத் தருக?

(10 புள்ளிகள்)

(ஆ) மேற்கூறிய கோட்பாடு பற்றிய கெயின்ஸின் விமர்சனங்கள் எவை?

(10 புள்ளிகள்)

04. (அ) பெறுமதி சேர்க்கை (Value Added) என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

(ஆ) நாடுகளிடையே வாழ்க்கைத் தரத்தை ஒப்பிடுவதற்கான ஓர் அளவீட்டுக் கருவி என்ற வகையில் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP) எந்தளவிற்கு உபயோகமானது?

(05 புள்ளிகள்)

(இ) ஒரு நாட்டின் நாணயப் பெறுமதியிறக்கமானது அந்நாட்டின் தொடர்ந்தேச்சியான சென்மதி நிலுவைப் பிரச்சினையை தீர்ப்பதில் எந்தளவிற்கு தாக்கமுள்ளதாய் அமையும் ஆராய்க?

(10 புள்ளிகள்)

05. (அ) கெஸின்சின் நுகர்வுத் தொழிற்பாட்டின் அடிப்படை அம்சங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) கெயின்சிற்கு பின் நுகர்வுத் தொழிற்பாட்டில் ஏற்பட்ட அபிவிருத்திகளை சுருக்கமாக குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

06. (அ) பணவீக்க இடைவெளி (Inflationary Gap) என்பதனை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ஆ) வேலையின்மைக்கும் பணவீக்கத்திற்குமிடையிலான தொடர்பினை பிலிப்ஸ் வளையியினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

(12 புள்ளிகள்)

07. (அ) முதலீடு என்பது பொருளியலில் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது?

(05 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டின் பொருளாதார முக்கியத்துவத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) "தனியாரின் முதலீட்டைத் தீர்மானிக்கும் இரண்டு காரணிகளில் மூலதனத்தின் எல்லைத் திறன் (MEC) என்பது வட்டிவீதத்திலும் பார்க்க அதிகம் மாற்றமடையக்கூடிய தன்மை கொண்டது". ஆராய்க?

(10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் ஏதாவது நான்கு பற்றி சுருக்கமாக விபரிக்குக.

i. திரவப் பொதிநிலை (Liquidity trap)
ii. கட்டமைப்பு ரீதியான வேலையின்மை
iii. IS.LM வளையியின் சரிவு
iv. வர்த்தக சகட ஓட்டம் (Business Cycle)
v. பெற்றோலிய விலை அதிகரிப்பும் இலங்கையில் பணவீக்கம் மீதான அதன் தாக்கமும்.
vi. பாதுகாப்பு செலவினை அதிகரிப்பும் இலங்கை பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கமும்.